ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

බැංකු නොවන මූල්‍ය ආයතන අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
DEPARTMENT OF SUPERVISION OF NON-BANK FINANCIAL INSTITUTIONS

අංක 30, ජනාධිපති මාවත, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01, இலங்கை
No. 30, Janadhipathi Mawatha, Colombo 01, Sri Lanka

2023 பெப்புருவரி 2 தொடர்பு:24/10/001/0019/005

முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

கனம் ஐயா/அம்மணி

**ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகவராண்மையொன்றாக ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்டை நீக்குதல்**

2018.03.13ஆம் திகதியிடப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்கள் மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் இது தொடர்புடையது.

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் கீழே கையொப்பமிட்டவருக்கு தெரிவிக்கப்பட்டதற்கமைவாக, 2023.01.31 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கையில் ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட் அதன் வியாபாரத் தொழிற்பாடுகளை நிறுத்துகின்றதுடன் அதற்கமைய தொடர்புடைய உடன்படிக்கைகளின் கீழ் அதன் சேவைநாடிகளுக்கு வழங்கப்பட்ட தரப்படுத்தல்களும் அத்திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் புறக்கீடு செய்யப்படுகின்றன.

இதன்விளைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகும் பொருட்டு, ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட் இடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேறு ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகாராண்மையுடன் புதிய உடன்படிக்கையினை விரைவாக கைச்சாத்திட்டு, அத்தகைய ஏற்பாடுகள் குறித்து கீழே கையொப்பமிட்டவருக்கு தெரியப்படுத்துமாறு கீழே கையொப்பமிட்டவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு தெரிவிக்கின்றார்.

இக்கடிதம், 2023.02.02 தொடக்கம் நடைமுறையிலிருக்கும் என்பதுடன் கொடுகடன் தரப்படுத்தல் மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையுடனும் ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரப்படுத்தல் முகவராண்மையொன்றாக லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிடெட்டை அங்கீகரித்தல் மீதான 2021ஆம் அண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
ஒப்பம்
(திருமதி. ஆர் எம் சி எச் கே ஜயசிங்க)
பணிப்பாளர்